தாராபுரத்தின் தன்மானம் காக்க – 'ரீல்ஸ்' முதல்வரின் ஆணவத்துக்குப் பதிலடி தர

அக்.6 - அன்று கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்வீர்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, அக். 5 -

தாராபுரத்தில் நடைபெற்ற ரோடு ஷோ மற்றும் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் "தாராபுரத்தின் தன்மானம் காக்க - 'ரீல்ஸ்' முதல்வரின் ஆணவத்துக்குப் பதிலடி தர கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களை வெற்றி பெறச் செய்வீர்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

இடைத்தேர்தல்: வாக்காளர்களின் கண்ணியத்திற்கு முதலமைச்சர் விட்டிருக்கும் சவால்!

மக்களிடம் பெற்ற வாக்குகளை விற்ற ஒரு வேட்பாளர் அதை விலை பேசி வாங்கிய ஒரு கட்சி. இவர்களுக்கா உங்கள் வாக்கு?

பெரும்பான்மையான மக்களின் ஆதரவில்லாத "ரீல்ஸ்" முதலமைச்சரின் ஆணவத்துக்குப் பதிலடி கொடுக்க, தாராபுரத்தின் தன்மானம் காக்க அக்டோபர் 6ஆம் நாள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சகோதரி வழக்கறிஞர் சுகன்யா அவர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தித் திணிப்பில்

'U Turn' அடிக்கும் த.வெ.க. அரசு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக் 5-

"இந்தித் திணிப்பில் 'U Turn' அடிக்கும் த.வெ.க. அரசு" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-


இதுவரை ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பைத் தான் தமிழ்நாடு எதிர்கொண்டு வந்தது.

தற்போது, மாநில அரசே அந்தப் பணியைச் செய்வதுதான் அவர்கள் சொன்ன மாற்றம் போல.

எல்லாவற்றிலும், ஆழம் பார்த்துவிட்டு, எதிர்ப்பு கிளம்பியதும் 'U Turn' அடிக்கும் த.வெ.க. அரசின் மற்றுமொரு முயற்சியா இது?

வடமாநில influencerகளுக்காக ரீல்ஸ் ஆட்சி நடத்தும் த.வெ.க. அரசு இதன் ஆபத்தை உணர்ந்து, உடனடியாகத் தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கிறேன்.

இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாட்டின்



உயிர்க்கொள்கை. அதில் விளையாட வேண்டாம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தள்ளாத வயதிலும் கழகத்திற்காக தளராமல் பணியாற்றிட வேண்டும் எனும் ஐயனார் போன்ற முன்னோடிகளின் உழைப்பால்

தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகளும் கழக வெற்றியினை உறுதி செய்து வரலாற்றில் இடம்பெறும்!

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

தாராபுரம், அக். 5 -

தாராபுரம் இடைத்தேர்தல் பணிகளுக்காக அலங்கியம் ஊராட்சியில் பொறுப்பேற்றுக்கொண்டு, கடந்த இரு வாரங்களாகத் தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இப்பணிகளுக்கு இடையில், வரலாற்றின் போக்கில் அலங்கியம் குறித்த இரண்டு ஆவணங்களைக் காணும் வாய்ப்பு எனக்கு எதிர்பாராத வகையில் கிடைத்தது. ஒன்று, பதிமூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு துண்டுக் கல்வெட்டு! இரண்டாவது, 1958ம் ஆண்டிலேயே அன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஐயா என்.வி.நடராசன் அவர்கள் அலங்கியத்தில் கழகக் கொடியேற்றி உரையாற்றிய நிகழ்வின் துண்டுப் பிரசுரம்!



முதலாவதாக, 800 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் 'அலங்கியம்' என்ற பெயரே இந்த ஊருக்கு நிலைத்திருக்கிறது என்பதை, கொங்குச் சோழ மன்னனான வீரராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டைப் படித்த போது அறிந்து மகிழ்ந்தேன்.

"ஸ்வஸ்திஸ்ரீ வீரரா ஜேந்திர தேவற்கு யாண்டு...

பொங்கலூர்க்கா நாட்டில் அலங்கியமா(ன)...

ராசேந்திர அதியமான அவிநாசி ஆளுடைய...

பெருங்கணைச் செல்வியார் ஸ்ரீபண்டாரத்து.. (பொன்)னறக் கொண்டு மண்ணற விற்ற நீர்நிலமாவது

காராண்மைக் காணி அரை மாவும் குறையும் நிபட்ட...."

என்பது அந்தக் கல்வெட்டின் பாடம். கலியுக கன்னீஸ்வரர் அல்லது திண்டீஸ்வரர் கோவில் என அழைக்கப்படும் இவ்வூர் சிவாலயத்தின் கருவறைக்கு முன்னர், தரைத்தளத்தில் பதிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டு, இந்த ஊரைச் சேர்ந்த வீரனான ராசேந்திர அதியமான் என்பவர் அவிநாசியில் உள்ள கோவிலுக்கு நிலக்கொடை வழங்கிய விவரத்தினைத் தெரிவிக்கின்றது.

காலப்போக்கில் மன்னனும், மக்களும், நிலத்தின் எல்லைகளும் மறைந்து போயின; ஊரின் பெயரில் ஒட்டியிருந்த உத்தம சோழ நல்லூர் என்ற பெயரும் கூட மறைந்து போய்விட்டது. ஆனால், அலங்கியம் மட்டும் இன்றும் நிலைத்திருக்கிறது.

இரண்டாவதாக, அலங்கியத்தின் இயக்க வரலாற்றில் 1958ம் ஆண்டு முதல் அழியாத கல்வெட்டாக அமைந்துவிட்ட அந்தக் கொடியேற்று விழா நிகழ்வில் பங்கேற்று, அந்தப் பெருமையுடன் இன்று தாராபுரம் நகரில் கழகத் தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உரையைக் கேட்கத் தனது 92ம் வயதிலும் துடித்துக் கொண்டிருக்கும் பெரியவர் ஐயா அய்யனார் அவர்களுடன் உரையாடும் வாய்ப்பினைப் பெற்றேன். இளமையிலிருந்து தன் உடலில் ஓடும் 'திராவிட ரத்தம்' குறித்து உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்ட ஐயா அவர்கள், பதினேழு கழகத் தொண்டர்களை மட்டும் கொண்டு அலங்கியத்தின் காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்த வரலாற்றை எனக்கு விளக்கினார்கள். உவகையும், உற்சாகமும், உணர்ச்சியும் ஊட்டிய உரையாடல் அது.

கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் அலங்கியம் நிலைத்து நின்று நெஞ்சினிக்கும் வரலாற்றுச் செய்திகளை நமக்கு உணர்த்துவது போலவே, தள்ளாத வயதிலும் கழகத்திற்காக தளராமல் பணியாற்றிட வேண்டும் என்ற உணர்வு மிக்க ஐயா அய்யனார் போன்ற முன்னோடிகளின் உன்னதமான உழைப்பால், தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகளும் கழக வெற்றியினை உறுதி செய்து வரலாற்றில் இடம் பெறும் என்பதே அந்த உரையாடல் எனக்கு உணர்த்திய செய்தி!

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர்

ஈ.ராஜா எம்.எல்.ஏ. சகோதரர் ஈ.பாலமுருகன் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

தென்காசி, அக்.5 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கழக மூத்த முன்னோடி ஈஸ்வரன் புதல்வரும், தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜாவின் அண்ணனும், தென்காசி 31-வது நகர்மன்ற உறுப்பினருமான ஈ.பாலமுருகன் நேற்று (03.10.2026) சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மறைவெய்தினார்என்பதறிந்துமிகவும்துயருற்றேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.வுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள் தொடர்பாக திமுக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டிஆர்பி ராஜா தலைமையில் அக்டோபர் 3 அன்று தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ காணொலி வாயிலாக பங்கேற்றார். சமூக வலைத்தளப் பணிகளிலும், நேரடியாக வாக்கு சேகரிக்கும் பணிகளிலும் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து விரிவான ஆலோசனைகளை அணிச்செயலாளர் வழங்கினார். ஆளுங்கட்சியின் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக கழக வழக்கறிஞர்களுடன் இணைந்து செயல்படுவது குறித்து சட்டத்துறைச் செயலாளர் விளக்கினார். தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். காணொலி வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

M.L.A. Shopping-ல் மும்முரமாக இருக்கும் முதலமைச்சர்!

த.வெ.க. ஆட்சி Waste ஆட்சி என மக்கள் முடிவு!

தாராபுரத்தில் மளிகைக் கடையில் விலைவாசி பற்றி கேட்டறிந்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!

சென்னை, அக். 5 -

"த.வெ.க. ஆட்சி வேலைக்கு ஆகாத Waste ஆட்சி என மக்கள் முடிவெடுத்து விட்டனர்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாராபுரத்தில் பரப்புரைக்கிடையே மளிகைக் கடையில் விலைவாசி உயர்வு குறித்து கேட்டறிந்த பின் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் விமர்சித்து பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

MLA Shoppingஇல் மும்முரமாக இருக்கும் முதலமைச்சருக்கு, மக்கள் மளிகைக் கடையில் கூட shopping செய்ய முடியாமல் கஷ்டத்தில் தவிப்பது தெரியுமா?

தாராபுரத்தில் பரப்புரைக்கு இடையே மளிகைக் கடை ஒன்றில் விலைவாசி உயர்வு குறித்து கேட்டேன். 4 மாதம் முன்பிருந்த விலையில் இருந்து அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவுக்கு உயர்ந்துள்ளது.

அன்றாடச் சமையலுக்கே வீடுகள் விழிபிதுங்கி நிற்கின்றன. ரீல்ஸ் பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா?

இந்தியா முழுவதும் பொருளாதார வளர்ச்சி இறங்குமுகத்தில் இருந்தபோது கூட, #Dravidian Model ஆட்சியில் தமிழ்நாடு ஏறுமுகத்தில் இருந்தது.

ஆனால் இன்றைய நிலை என்ன?



இந்தியா முழுவதும் GST வருவாய் உயர்ந்த நிலையில் கூட, கடந்த மூன்று மாதங்களாகத் தமிழ்நாடு சரிவைச் சந்தித்து வருகிறது.

இந்த ஆட்சி வேலைக்கு ஆகாத Waste ஆட்சி என முடிவெடுத்து, தமிழ்நாடு அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையான Guidance TNஇல் இருந்தும் அனுபவமிக்க வல்லுநர்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்வதாகச் செய்திகள் வருகின்றன.

பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் ஒழுங்கு, மருத்துவம், பால்வளம் என எல்லாவற்றிலும் தமிழ்நாடு வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

இவற்றில் கவனம் செலுத்தாமல், விளக்குமாத்துக்குப் பட்டுக் குஞ்சம் என்பது போல எல்லாவற்றிலும் 'வெற்றி' என Sticker ஒட்டினால் போதும் என நினைக்கும் அரசிடம் மாட்டிக்கொண்டு மக்கள் தவிக்கின்றனர்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில், கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் மேற்பார்வையில், பொள்ளாச்சி தெற்கு நகர செயலாளர் அமுதபாரதி ஒதுக்கப்பட்டுள்ள குண்டடம் ஒன்றியம் – வேங்கிபாளையத்தில், கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், பொள்ளாச்சி நகரமன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன், ஒருங்கிணைப்பில் மின்வெட்டு உள்ளிட்ட கோரிக்கைகளுடன் மனு அளிக்கப்பட்டது இந்த நிகழ்வில் நகரமன்ற உறுப்பினர் பி.ஏ.செந்தில்குமார், கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், முன்னாள் மாவட்ட வர்த்தகரணி துணை அமைப்பாளர் வடுகை லிங்கத்துரை, பொள்ளாச்சி நகர தகவல் தொழில்நுட்ப அணி விக்னேஷ் பிரபு, முகேஸ் பாண்டியன், தனுஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.